பதஞ்சலி யோக சூத்திரம்

முன்னுரை

தியானம்

யோகேன சித்தஸ்ய பதேன வாசாம்
மலம் சரீரஸ்ய ச வைத்ய கேன
யோ பா கரோதும் ப்ரவரம் முனீனாம்
பதஞ்சலிம் ப்ராஞ்ஜலி*[ர்]* ஆனதோஸ்மி

பதஞ்சலி மகரிஷி சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர் என்று கூறப்படுகிறது..அவர் முக்கியமாக மூன்று நூல்களை செய்து இருக்கிறார் என்று மேலே உள்ள ஸ்லோகம் காட்டுகிறது..
அதாவது சித்த சுத்திக்கு யோக சூத்திரங்களையும், வாக்கு சுத்திக்கு இலக்கண நூலையும் மற்றும் சரீர சுத்திக்காக வைத்ய சாஸ்திர நூலான ஆயுர்வேதத்தையும் செய்து இருக்கிறார்..
இதில் நாம் இப்போது யோக சூத்திரங்களை விரிவாக பார்க்க இருக்கிறோம்.
இது நான்கு பாகங்களாக பிரிக்கப்பட்டு எழுதப்பட்டு இருக்கிறது. அவைகள்
1] சமாதி பாதம்,
2] சாதனா பாதம்,
3] விபூதி பாதம், மற்றும்
4] கைவல்ய பாதம் என்பன..
முதல் பாதம் சமாதி பாதம் சித்தத்தில் எழும் எண்ண ஓட்டங்களை நிறுத்துவத்தின் அவசியத்தை பற்றி பேசப்படுகிறது..எண்ண ஓட்டங்கள் நின்ற மனதில் ஏற்படும் பல்வேறு சமாதி நிலைகளை விரிவாக விளக்குகிறது.
யோக சாஸ்திரம் சுருக்கமாகவும் ,முழுமையாகவும் முதல் பாதத்தில் சொல்லப்படுகிறது..அடுத்து வரும் பாதங்களில் இதில் கூறப்பட்டு இருக்கும் முக்கிய பகுதிகள் விரிவாக கையாளப்படும்..

இரண்டாவது சாதனா பாதத்தில் அஷ்டாங்க யோகத்தின் முதல் ஐந்து அங்கங்களான "பகிரங்க யோகா " விவரிக்கப்படுகிறது
.
மூன்றாவது பாதம் அஷ்டாங்க யோகத்தின் கடைசி மூன்று அங்கங்களான "அந்தரங்க யோகா' பற்றியும், பயிற்சிகளின் இடையே தோன்றக்கூடிய பல்வேறு சக்திகளை பற்றியும் விளக்குகிறது..

நான்காவது பாதம் பிறப்பின் ஒரு சில ரகசியங்களையும், சித்தம் மற்றும் மனதின் வளர்ச்சி பரிணாம கட்டங்களையும் கூறி , யோக சாதனைகளின் முடிவாக கிடைக்கும் கைவல்ய பிராப்தி விவரிக்கிறது

இப்போது நாம் முதல் பாதம் சமாதி பாதத்தை விவரமாக பார்ப்போம்..

பதஞ்சலி யோக சூத்திரம் // சமாதி பாதம்

{விளக்கம் / விரிவுரை}

Samadhi Pada

1] ***अथ योगानुशासनम्***

இப்போது யோகா விவரமாக சொல்லப்பட உள்ளது

2] ***योगश्चित्तवृत्तिनिरोधः॥२॥***

யோகா என்பது சித்தத்தில் எழும் எண்ண அலைகளை படிப்படியாக குறைத்து கடைசியாக முழுவதும் எண்ண ஓட்டங்களற்ற சமாதி நிலையில் உறைவதே.
"சித்த விருத்தி" என்பது பல அர்த்தங்களை கொண்டது என்றாலும் தற்போது "நம்மை ஓயாமல் அலைக்கழிக்கும் எண்ண ஓட்டங்கள்" என்ற விதத்தில் எடுத்துக்கொள்வோம்.
"சித்தம்" என்ற பதம் மனம், புத்தி மற்றும் அஹம் எனும் பாவம்[ego] உள்ளடக்கியது..ஆகவே சித்த விருத்தி என்றால் இம்மூன்றிலும் உண்டாகும் எண்ண ஓட்டங்களை குறிக்கும்.
"நிரோதம்" என்ற பதத்தையும் இங்கு குறைப்பது/நிறுத்துவது/ஒழுங்கு படுத்துவது என்ற பொருளில் எடுத்துக்கொள்வோம்..
சித்தவிருத்தியை ஒழுங்குபடுத்தி, மனதை ஒருமுகப்படுத்துவதை மையப்படுத்தியே யோக சூத்திரங்கள் அனைத்தும் அமைந்திருக்கும்..இந்த கருத்தை மனதில் கொண்டே மற்ற சூத்திரங்களுக்கு பொருள் கொள்ள வேண்டும்..ஏனெனில் சித்தவிருத்தியை நிறுத்துவது தான் யோகா..

3] ***तदा द्रष्टुः स्वरूपेऽवस्थानम्॥३॥***

4] वृत्तिसारूप्यमितरत्र॥४॥

3…எண்ண ஓட்டங்கள் முழுவதும் ஓய்ந்த சமாதி நிலையில் இருப்பவரை இங்கு "திருஷ்டு" என்று குறிப்பிடுகிறார் பதஞ்சலி..
[பயம்/விருப்பு/வெறுப்பு/ அஹம் எனும் பாவம்[ego] இவைகளால் தீண்டப்படாத, எண்ண ஓட்டங்கள் முழுவதும் அடங்கிய நிலையிலேயே திருஷ்டு நிரந்தரமாக நிலைத்து விடுகிறார்..இந்த தன்னை அறிந்த நிலையையே திருஷ்டுவின் "ஸ்வரூப நிலை" என்று குறிப்பிடப்படுகிறது.

[உண்மையில் இந்த நிலையே ஒவ்வொருவரின் ஸ்வரூபமும் கூட.
.நாம்தான் நம்மை நம் உடலுடனும்,மனதுடனும்,அஹம் என்ற பாவத்தில் இணைத்துக்கொண்டு நம் ஸ்வரூப நிலையை மறந்து விட்டோம்..
இந்த ஸ்வரூப நிலையை நாம் மறுபடியும் எட்டவே இந்த யோக சாஸ்திரம் முயலுகிறது]

4…எண்ண ஓட்டங்கள் அடங்கிய, ஸ்வரூப நிலையை அடைய முடியாத மற்றவர்கள், அவரவர்களின் மனோ,புத்தி, அஹங்கார த்தில் எழும் எண்ண அலைகளை ஒட்டி அதற்க்கேற்ற சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு இருப்பார்கள்..சித்தத்தில் ஏற்படும் எண்ண ஓட்டங்களை சார்ந்து அவர்கள் வாழ்க்கையின் வழிமுறைகள் அமையும்.. இதை "விருத்தி ஸாரூப்யம் " என்று குறிப்பிடுகிறார் பதஞ்சலி .

5] **वृत्तयः पञ्चतय्यः क्लिष्टाक्लिष्टाः॥५॥**

சித்த விருத்திகள் [அலை அலையாக கிளம்பும் எண்ண ஓட்டங்கள்] அனைத்துமே ஐந்து வகைப்படும்..பொதுவாக அவை துக்கம் கொடுப்பவை அல்லது துக்கம் கொடுக்காதவை என பிரித்து அறியலாம்..

[எப்படி இருந்தாலும் மனதின் சமநிலை/சமாதி நிலை பாதிக்கப்படுவதால் இந்த விருத்திகள் நிரந்தர மகிழ்ச்சியை கொடுக்காது என்று கருதி விவேகிகள் சித்தவரித்திகளை நிறுத்துவதிலேயே குறிக்கோளாக செயல்படுவார்கள்]

6] **प्रमाणविपर्ययविकल्पनिद्रास्मृतयः॥६॥**

பிரமாணம் / விபர்யயம்/ விகல்பம் /நித்திரை/ மற்றும் பழைய ஞாபகங்கள் முதலியவைகளின் மூலம் தான் சித்தத்தில் என்ன ஓட்டங்கள் எழும் [சித்தவிருத்தி நடக்கும்]....இவைகளை விவரமாக இப்போது பார்ப்போம். .

7] **प्रत्यक्षानुमानागमाः प्रमाणानि॥७॥**

..நேரடியாக பார்த்து /கேட்டு /உணர்ந்த விஷயங்கள் [ஐம்புலன்களாலும் உணர்ந்து அறிந்துகொண்ட விஷயங்கள்],

..உள்ளுணர்வால் அனுமானம் செய்து அறிந்து கொண்ட விஷயங்கள்

..மற்றும் வேதம்/ப்ரஹ்ம ஸூக்தம்/உபநிடதம்/ஆகமம் போன்ற ப்ரமாண கிரந்தங்கள் மூலம் தெரிந்து கொண்ட விஷயங்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரண் படாமல் இருப்பின் **ப்ரமாணம்** என்று சொல்லப்படுகிறது..

பிரமாணம் என்னும் சொல் உண்மையான ஞானம், அறிவு **[Right Understanding]** என்றும் கொள்ளலாம்..

8] **विपर्ययो मिथ्याज्ञानमतद्रूपप्रतिष्ठम्॥८**

விபர்யயம் என்பது தவறாக புரிந்து கொண்டதால் ஏற்பட்ட அறிவு. தனிப்பட்ட கோப தாபங்களினாலும்/மாயையினாலும் இல்லாத ஒன்று உண்மையாக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் போது ஏற்பட்ட ஞானம் /அறிவே **விபர்யயம் [Wrong Knowledge]**.

9] ***शब्दज्ञानानुपाती वस्तुशून्यो विकल्पः॥९***

கேள்விப்பட்ட விஷயங்களை மட்டுமே அடிப்படையாக கொண்டு எழும் எண்ண ஓட்டங்களை [சித்த விருத்தி] விகல்பம் என்று சொல்கிறார் ..உண்மையில் அப்படி எந்த ஒரு விஷயமும் நடக்கவே இல்லை [வஸ்து சூன்யம்], ஆனாலும் அதை ஒட்டி ஏற்படும் எண்ண ஓட்டங்களை "விகல்பம்" என்கிறார்..

10] ***अभावप्रत्ययालम्बना वृत्तिर्निद्रा॥१०॥***

ஆழ்ந்த நித்திரையில் நம்மை அறியாமல் எழும் எண்ண ஓட்டங்களை குறிப்பிடுகிறார்..இங்கு மனதில் எந்தவித தோற்றமும்/பாவமும் இல்லை..ஒன்றுமே நடக்காதது போன்ற தோற்றம்..இருப்பினும் எண்ண ஓட்டங்கள் உண்டு என்கிறார்..இது நான்காவது வகை சித்தவிருத்தி

நாம் இங்கு ஸ்வப்னம் [கனவு நிலையை] பற்றி சொல்லவில்லை..ஆழ்ந்த உறக்க நிலையை குறிப்பிடுகிறோம்..

11] ***अनुभूतविषयासंप्रमोषः स्मृतिः॥११॥***

இங்கு நாம் அனுபவித்து முடிந்து ஞாபகங்களாக சேமித்து வைத்து இருக்கும் விஷயங்களை குறிப்பிடுகிறார்..சம்பவம் என்னவோ நடந்து முடிந்து

விட்டது..இருப்பினும் அதை விடாமல் பிடித்துக் கொண்டு அவ்வப்போது அதை பற்றியே நினைத்துக் கொண்டு/பேசிக்கொண்டு இருந்தால், மறையாத எண்ண ஓட்டங்களாக நம்மை அலைக்கழிக்கும்..இவைகளே நம் ஞாபகங்களால் தோன்றும் ஐந்தாவது வகை சித்தவிருத்தி. [இவை அனைத்துமே நம் மனதின் சமநிலை பாதிப்பதால், கஷ்டங்கள் கொடுக்கக்கூடியவை கள் என்று விவேகிகள் கருதுகின்றனர்]..

12] ***अभ्यासवैराग्याभ्यां तन्निरोधः॥१२॥***

அப்யாசத்தினாலும், வைராக்கியத்தாலும் இந்த ஐந்து வழியாகவும் தோன்றும் சித்த விருத்திகளை ஒழுங்கு படுத்தவும் முடிவில் நிறுத்தவும் முடியும்..இனி அப்யாசம் என்றால் என்ன வைராக்கியம் என்றால் என்ன என்று பார்ப்போம்.

13] ***तत्र स्थितौ यत्नोऽभ्यासः॥१३॥***

சித்தவிருத்தி / மனதின் எண்ண ஓட்டங்களை முழுதும் அடக்கிய நிலையை அடைவதை குறிக்கோளாக கொண்டு செய்யும் எல்லாவித முயற்சிகளும் அப்யாசம் ஆகும் ..அதுவே யோகா..

14] ***स तु दीर्घकालनैरन्तर्यसत्कारासेवितो दृढभूमिः॥१४॥***

இந்த அப்பியாசம் தொடர்ந்து நீண்ட காலமாகவும், நிரந்தரமாகவும் , செய்வதை முழு மனதுடன் கவனம் சிதறாமல் சிரத்தையுடன்-அதை ஒரு பாரமாக நினையாமல்- செய்தால் இந்த அப்பியாசங்கள் உன்னுள் திடமாக நிலைத்துவிடும்..
பயிற்சிகளில் நிரந்தரத்வம் கொண்டு வருவது எப்படி? சுலபமான வழி என்னவென்றால், பேச்சு, சிந்தனை,மற்றும் செயலில் ஒன்றுக்கொன்று முரண் பாடில்லாமல் நம் செயல்கள் அனைத்தும் இருந்தால் போதும்..அப்படி 'செய்யும் தொழிலே தெய்வம்' என்றவாறு செய்து வந்தால், நம் செயல்களே நம்மை ஒரு தியான நிலைக்கு கொண்டு சென்றுவிடும்..அப்போது நம் ஒவ்வொரு தினப்படி செயலும் ஒரு யோகாப்யாசமாக மாறிவிடும்...சித்த விருத்தியும் படிப்படியாக குறைந்து மறையும்.
சித்தத்தின் விருத்திகளை குறைப்பதுதான் யோக அப்பியாசத்தின் நோக்கம் .

15] ***दृष्टानुश्रविकविषयवितृष्णस्य वशीकारसंज्ञा वैराग्यम्॥१५॥***

பார்த்து கேட்ட விஷயங்களில் இருந்து விலகி, பற்றற்ற நிலையில் இருந்து கொண்டு , இப்படிப்பட்ட விஷயங்கள் தன்னை **பா**திக்கவோ / அலைக்கழிக்கவோ இல்லை என்ற திடமான நம்பிக்கையில் நிலைப்பதே **வைராக்கியம்...**

...விலகி இருத்தல் என்று இங்கு குறிப்பிட்டது ,அந்த அந்த விஷயங்களின் மீது விருப்பு/வெறுப்பு மற்றும் கோப/தாபங்களை வெளிப்படுத்தாமல் அனுபவிப்பது என்று கொள்ள வேண்டும்..அவ்வித விஷயங்களால் ஈர்க்கப்படாமல் , மனதின் சமநிலை எக்காரணத்தைக் கொண்டும் குலையாமல் எப்போதும் நிதானத்துடன் இருப்பதை குறிப்பது...இது ஒருவித பற்றற்ற <u>அபர வைராக்கிய</u> நிலை

.

16] ***तत्परं पुरुषख्यातेर्गुणवैतृष्ण्यम्॥१६॥***

புருஷ லக்ஷணம் தெரிந்ததனாலும் , தன் உண்மை **ஸ்வரூப லக்ஷ்ணமும்** அதேதான் என்று உணர்ந்து கொண்டதாலும் **["நிர்குணன்"],** ப்ரக்ருதிக்கே உரித்தான

குணங்களின் ஈர்ப்புக்கு இடம் கொடுக்காமல் விலகி இருப்பதே **உத்தமமான வைராக்கியம்..**

*...விளக்கம் : முக்குணங்களும் **[ரஜஸ் /தமஸ் /சாத்விகம்]** உடல் சம்பந்த பட்டவை....இவைகளை **ப்ரக்ருதி ஸ்வபாவம்** என்று கூறுவர்..அதனால்தான் நாம் சம்பிரதாயமாக சந்தியாவந்தனம் செய்யும் போது முடிவில் "நான் இந்த உடம்பினாலும் , வாக்காலும், இந்திரியங்களினாலும் மற்றும் புத்தியாலும் செய்த அனைத்து காரியங்களும் ப்ரக்ருதி சம்பந்தத்தால் நடந்தது..என் ஸ்வரூப லக்ஷணம் அறியாததால் செய்து விட்டேன்..ஆகவே என்னை மன்னித்து காத்தருள வேண்டும்" என்று இறைவனை வேண்டுகிறோம்..ப்ரக்ருத்திக்கும் புருஷனுக்கும் உள்ள வித்தியாசத்தை சிறு வயதிலேயே சொல்லிக் கொடுத்து விடுவது நம் சனாதன பழக்கம்...***புருஷன் நிர்குணன்**..குண பரிமாணங்களால் தாக்கப்படாதவன்.. இந்த வித்தியாசம் நன்கு உணர்ந்த காரணத்தினால் இந்த முக்குணங்களாலும் - காணப்படும் பொருட்கள் மற்றும் விஷயங்களால்- தன் மனநிலை பாதிக்கப்படாமல் கவனமாக நடந்து கொள்வதே உத்தமமான பர வைராக்கியம் என்று இங்கு அறிவுறுத்தப்படுகிறது .

17] ***वितर्कविचारानन्दास्मितारूपानुगमात् संप्रज्ञातः॥१७॥***

விதர்க்க , விசார , ஆனந்த மற்றும் அஸ்மிதா நிலைகளை சார்ந்து ஏற்படுவது **ஸம்ப்ரஞ்ஞாத சமாதி** எனப்படும்..

.....பார்த்து, கேட்டு அறிந்த புற விஷயங்களில் சந்தேகமோ குழப்பமோ ஏற்படும் போது, அதை தர்க்க ரீதியாக [debate, discussions] ஆராய்ந்து பிறகு அவ்விஷயங்களில் ஒரு தெளிவு ஏற்பட்ட உடன் கிடைக்கக்கூடிய ஒரு வகை நிம்மதியையே விதர்க்க சமாதி எனப்படுவது..இது புலன்களால் அறிய கூடிய வெளி விஷயங்களில் இருந்து விதர்க்கத்தை ஒட்டி ஏற்படும் **ஸம்ப்ரஞ்ஞாத சமாதி**

.....விசாரத்தை ஒட்டி வரக்கூடிய சமாதான நிலை, மனதுக்குள் நம்மை வாட்டி எடுக்கும் விஷயங்களைப் பற்றியது..இது தீவிரமாக ,தனியாக யோசித்து [introspection], அதன் காரணமாக ஏற்பட்ட தெளிவினால் கிடைக்கும் ஒரு வகை மன சமாதானம்..

.....ஆனந்த நிலையை ஒட்டி ஏற்படும் தெளிவு , நம் புத்தி சம்பந்தத்தை ஒட்டி ஏற்படுவது..முதலில் புரியாதது போல் தோன்றும் அறிவு சார்ந்த விஷயங்கள் புரிய ஆரம்பித்தவுடன் ஏற்படும் ஒரு வகை தெளிவினால் ஏற்படும் நிறைவு.. .

......கடைசியாக நம்முடைய அஹம் எனும் பாவத்தை இழக்கும் போது ஏற்படுவது..இதைத்தான் அஸ்மிதா ஒட்டி ஏற்படும் சமாதி போன்ற பாவம் என்று அழைக்கப்படுகிறது..

இவை அனைத்திலுமே மேலோட்டமாக தோன்றும் சப்த ஞானம் மற்றும் அவைகளின் உண்மையான அர்த்த ஞானம் என்ற இரண்டு வகைகளில் தெளிவு

ஏற்படும்..இருப்பினும் இரண்டாவதாக சொல்லப்பட்ட அர்த்த ஞானம் ஏற்பட்டவுடன் தான் மன நிறைவும் ஒருவகை சாந்தமான சமாதி நிலையும் கிடைக்கும்..

18] *विरामप्रत्ययाभ्यास पूर्वः संस्कार शेषोऽन्यः॥१८॥*

தொடர்ந்த அப்பியாச, வைராக்கிய பயிற்சிகளால் இந்த நான்குவித இடங்களிலும் ஒரு தெளிவு ஏற்பட்ட பிறகு ஏதோ பிரச்சனைகளோ குழப்பங்களோ இல்லாதது போன்ற மகிழ்ச்சி ஏற்படும், ஏனெனில் நம்முள் நம் அறிவிற்கு உட்பட்ட விஷயங்களில் தெளிவு ஏற்பட்டுவிட்டதால்...ஆனால் நம் ஆழ் நிலையில் நம்மால் உணர முடியாத இடத்தில், [நம் காரண சரீரத்தில்] பல விஷயங்கள் **"ஸம்ஸ்காரங்களாக"** இருக்கும்..நம்மால் உணர முடியாததால் இங்கு ஏற்படும் சமாதி நிலையை, முதலில் குறிப்பிட்ட நான்கு வித சமாதியிலிருந்து மாறுப்பட்ட நிலையாக **"அந்ய"** என்ற பதத்தினால் குறிப்பிடுகிறார்...இதை **அசம்ப்ரஞ்ஞாத சமாதி** என்று குறிப்பது உண்டு..

19] **भवप्रत्ययो विदेहप्रकृतिलयानाम्॥१९॥**

தேகம் அற்றவர்களாகட்டும் **[விதேஹி]**, **தே**கத்துடன் இவ்வுலகில் உழன்று கொண்டு இருப்பவர்களாகட்டும் அவரவர்களின் சித்தத்தில் [ஆழ் மனதில்] அந்த நிலைக்குரிய வினையின் பதிவுகள் [Impressions] வாசனா ரூபமாக, பிறக்கும் போதே இருக்கும்.. சித்தத்தில் அப்படியொரு பிராரப்த வினை பதிவு இல்லாமல் அவரவர்களுக்கு அவ்வகை பிறப்பு கிடையாது.

இதனால் சிலர் சில வகை சக்திகளை பிறவியிலேயே பெற்றிருப்பர்...

20] **श्रद्धावीर्यस्मृतिसमाधिप्रज्ञापूर्वक इतरेषाम्॥२०॥.**

ஆனால் மற்றவர்களோ பிறவியிலேயே சக்திகள் ஏதும் இல்லாவிட்டாலும், அவைகளை தீவிரமான ஷ்ரத்தா,வீர்யம், ஞாபக சக்தி , மற்றும் சமாதி நிலையில் இருக்க உதவும் பல்வேறு பயிற்சிகளினால் அடைகிறார்கள்.

21] **तीव्रसंवेगानामासन्नः॥२१॥**

பயிற்சிகளில் தீவிர ஈடுபாட்டுடன் இருப்பவர்களுக்கு இந்த சமாதி நிலை சுலபமாக கிட்டுகிறது.

22] **मृदुमध्याधिमात्रत्वात् ततोऽपि विशेषः॥२२॥**

மற்றபடி பயிற்சிகளில் செலுத்தும் கவனத்தை ஒட்டி இந்த சித்தவிருத்தி நிரோத நிலையின் தன்மையும் மாறுபடும் [ம்ருது, மத்தியமம் என்ற வகையில்]....குறிப்பிட்ட தீவிரமான பயிற்சிகளை காட்டிலும் விசேஷமான மற்றொரு வழியிலும் இந்த சமாதி நிலை கிடைக்கும்.

23] **ईश्वरप्रणिधानाद्वा॥२३॥**

ஈஸ்வரனிடம் பக்தியுடன் பரிபூரணமாக சரணடைவதாலும் சமாதி நிலையை அடைய முடியும்.

24] **क्लेशकर्मविपाकाशयैरपरामृष्टः पुरुषविशेष ईश्वरः॥२४॥**

"க்ளேஷம்" என்று சொல்லப்படும் "ஆதி வியாதி" களினாலும், அவைகளினால் ஏற்படும் **கர்ம வினை பயன்களின்** எந்த ஒரு நிலையாலும் ஒரு போதும் பாதிக்கப்படாத விசேஷ புருஷனே "ஈஸ்வரன்"

.....சாதாரண மனிதனை பிறப்பிலிருந்தே பிடித்து அலைக்கழித்துக் கொண்டு இருக்கும் ஐந்து 'தோஷங்கள்'/'துக்கங்கள்', **க்ளேஷம்** என்று அழைக்கப்படுகின்றது..அவைகள்

1] **அவித்யா**,

2] **அஸ்மிதா [ego],**

3] **ராக [விருப்பு]**,

4] **த்வேஷ [வெறுப்பு]**......மற்றும்

5] **பயம்** [பிறப்பு/இறப்பு பற்றியது]

இவற்றில் 'அவித்யா' என்பது பல வகைப்படும் ..முதலில் அநித்தியமான வஸ்த்துக்களை நித்தியமானவைகளாக நினைத்து அவைகளை போஷிப்பது..இவ்வகை வஸ்துக்கள் தோன்றி மறைய கூடிய தன்மையை கொண்டதானாலும் அவைகளை அதீதமாக போற்றி பாதுகாத்து, அவைகள் மறையும்போது துக்கப்படுவது...இரண்டாவது அஸ்மிதா எனப்படுவது, 'நான்/எனது' என்ற அஹங்காரணத்தினால் ஏற்படுவது ..அடுத்த மூன்றும் [விருப்பு/வெறுப்பு/பயம்] இந்த 'நான்/எனது' என்ற அஹங்காரணத்தினிலிருந்து தோன்றுவது..

இந்த ஐந்து வகை தோஷங்களினாலும் அவைகளினால் ஏற்படும் கர்ம வினை பயன்களாலும் ஒரு போதும் தீண்டப்படாத விசேஷ புருஷனே ""ஈஸ்வரன்"" என்று கூறுகிறார் பதஞ்சலி மகரிஷி.

அதோடு இந்த ஐவகை தோஷங்களும் நன்கு வளர்ந்த நிலையிலாகட்டும், அல்லது வளராத விதை [பீஜம்] நிலையில் இருந்தாலும் அவை ஈஸ்வரனின் சமநிலையை பாதிக்காது..அப்பேற்பட்ட விசேஷ புருஷனே "ஈஸ்வரன்""

25] **तत्र निरतिशयं सर्वज्ञबीजम्॥२५॥**

ஈஸ்வரன் ஞான ஸ்வரூபன்..அவனிடம் அனைத்து கலைகளை /விஷயங்களை பற்றிய மிக உன்னதமான, நிகரற்ற, வேறு எவரிடமும் காணமுடியாத 'சர்வஞ த்வம்'- அனைத்தையும் அறிந்த நிலை- உண்டு..

26] **पूर्वेषाम् अपि गुरुः कालेनानवच्छेदात्॥२६॥**

நமது மூதாதையர்களுக்கும் அவனே குரு, எப்படியென்றால் ஈஸ்வரன் காலத்தினால் தீண்டப்படாதவன்.[நமக்கும், பின்னால் வரவிருக்கும் சந்ததியினருக்கும் கூட ஈஸ்வரனே குரு ..காலனும் அவனே..காலம் அவனுக்குள் அடக்கம்...முதலும், முடிவும் அற்றவன் ஆகையால் ஈஸ்வரனுக்கு கால நிர்ணயம் ஒருவராலும் செய்ய முடியாது]..

27] **तस्य वाचकः प्रणवः॥२७॥**

பிரணவ சப்தமே அவனை குறிப்பிடும் சொல்..['ஓம்" எனும் சப்தம்]

28] **तज्जपस्तदर्थभावनम्॥२८॥**

பிரணவ சப்தத்தின் பொருள் உணர்ந்து அதை ஜபம் செய்யவும்.
[ஓம் எனும் சப்தம் 'அ', 'உ' மற்றும் 'ம்' என்ற மூன்று ப்ரதான சப்த ஒலிகளை உள்ளடக்கியது...இந்த மூன்று ஒலி அலைகளை சேர்த்து 'ஓம்' என்று உச்சரிக்கும் போது நம் வயிறு,மார்பு மற்றும் கபாலத்திற்குள் அடங்கிய பல்வேறு முக்கிய உறுப்புகளுக்கும் ஒருவித அமைதி கொடுக்க கூடிய அதிர்வுகள் கிடைக்கின்றன.. இதனால் இவ்வுறுப்புகள் ஆரோக்கியமாக செயல்படும் சூழ்நிலை ஏற்படுகிறது]..

29] **ततः प्रत्यक्चेतनाधिगमोऽप्यन्तरायाभावश्च॥२९॥.**

அப்படிப்பட்ட தீவிரமான ஜபத்தில் இருக்கும் போது, சாதாரணமாக வெளி நோக்கு பார்வையிலேயே இருக்கும் நம் பார்வை உள்முகமாக திரும்பும் தன்மையை பெறுகிறது..அதாவது நாம் **தி**யான நிலைக்கு செல்வது சுலபமாக நடைபெறுகிறது..வெளி உலக நிகழ்வுகள் நம்மை சலனப்படுத்துவதில்லை..இப்போது நம்முள் உறைந்து இருக்கும் ஆத்மனை பற்றிய ஞானம் தோன்ற ஆரம்பிக்கிறது..அதன் காரணமாக சித்தம் குழப்ப நிலையில் இருந்து ஒருவித தெளிவு நிலைக்கு வருவதால் அந்த தெளிவான நிலை முகத்தில் பிரகாசிக்கும்..ஆத்ம ஞானத்தில் சித்தத்தில் ஏற்படும் தெளிவையே "**ப்ரத்யக் சேதனா**" என்று குறிப்பிடுகிறார்..
அதோடு நம் பயிற்சிகளுக்கு இடையூறாக இருக்கும் தடங்கல்களும் நீங்குகின்றன..தடங்கல்கள் நீங்கியதால் ஏற்படும் மன சாந்தியும் உண்டாகிறது ..
நம் முயற்சிகளுக்கு தடங்கலாக அமையும் விஷயங்கள் என்னென்ன என்று இப்போது பார்ப்போம் .

30] **व्याधिस्त्यानसंशयप्रमादालस्याविरतिभ्रान्तिदर्शनालब्धभूमिकत्वानवस्थितत्वानि**
चित्तविक्षेपास्तेऽन्तरायाः॥३०॥

வியாதி, ஸ்தியான, ஸம்சய, ப்ரமாத, ஆலஸ்ய, அவிரதி, ப்ராந்தி தர்ஷன, அலப்த பூமி கத்வா, அனவஸ்திதத்வானி என்று முதல் வரியை பிரித்து படிக்கவும்

..இவைகளே உன்னை உன் பயிற்சியிலிருந்து திசை திருப்பும் விஷயங்கள்..இவைகளே உன் பயிற்சிக்கு தடங்கல்கள்..

"**வியாதிகள்**" என்ன என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்..

"**ஸ்தியான**" என்பது நம்மிடம் குடிகொண்டு இருக்கும் ஒருவித சோர்வு /மந்த புத்தி..எந்தவித குறிக்கோளும் இல்லாமல் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டு வருவதால் வருவது...இந்த நிலையே சுகம் என்று நினைத்தால் நம் வளர்ச்சி தடைபடும்.

"**சம்சயம்**" என்பது நம்முள் ஏற்படும் தேவையற்ற சந்தேகங்களை குறிப்பது..

"**பிரமாத**" எனும் பதம் நம்முள் ஏற்படும் அலட்சிய பாவத்தை குறிப்பது ..

"**ஆலஸ்ய**" என்பது நம் சோம்பேறித்தனத்தை குறிக்கிறது.

"**அவிரதி**" என்பது வெளி விஷயங்களில் ஈர்க்கப்பட்டு அவைகளின் பின்னால் அலைவதை குறிக்கும் சொல்..நம் அவசரத்தையும் குறிக்கோளை அடைவதற்காக காட்டும் வெறித்தனைத்தையும் காட்டும் சொல்..

"**ப்ராந்தி தரிசனம்** " என்பது அடையாத ஒன்றை அடைந்து விட்டதாக நினைக்கும் தவறான நினைப்பு.[மயக்கம், **delusion** என்று கொள்ளலாம்]

"**அலப்த பூமி கத்வா**" என்பது ஒரு நிலையை எட்ட முடியாமல் தவிக்கும் அவஸ்தையை குறிப்பது..கடைசியாக

"**அனவஸ்திதத்வானி**" என்பது அடைந்த நிலையை தக்க வைத்துக்கொள்ளாமல் இருப்பதால் ஏற்படும் நிலை..

இந்த ஒன்பதும் நம்மை நம் குறிக்கோளிலிருந்து திசைதிருப்பும் விஷயங்கள்..இவைகளே தடங்கல்கள்..

31] **दुःखदौर्मनस्याङ्गमेजयत्वश्वासप्रश्वासा विक्षेपसहभुवः॥३१॥**

துக்கம், மனநிலை பாதிப்பு, உடலில் அங்கங்களில் நடுக்கம், மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கும் வகையில் சுவாசத்தின் சீரான போக்கு பாதிப்பு... இவை அனைத்தும் நம் குறிக்கோள்கள் திசை திரும்பியதால் ஏற்படும் விளைவுகள் **[side-effects]**..இவை நம் நோக்கம் நிறைவேறாமல் திசைதிருப்ப பட்டதை காட்டிக்கொடுக்கும்..

32] **तत्प्रतिषेधार्थमेकतत्त्वाभ्यासः॥३२॥.**

இந்த விளைவுகளிலிருந்து விடுபட்டு பழைய [ஆரோக்கிய] நிலைக்கு திரும்ப, நாம் முன்னே கூறிய பிரணவ தத்துவத்தின் அர்த்தத்தை ஆழ்ந்து சிந்தித்து, ஓங்கார ஜபத்தை ஒரு அப்யாசமாக செய்வதை உறுதியாக பற்றிக் கொள்வது நல்லது... இது தவிர மேலும் சில பயிற்சிகளி னாலும் இந்த தடங்கல்களை நீக்கலாம்..அவைகளில் முதலாவதாக :

33] **मैत्रीकरुणामुदितोपेक्षणां सुखदुःखपुण्यापुण्यविषयाणां भावनातश्चित्तप्रसादनम्॥३३॥**

இங்கு '**மைத்ரீ** ' எனும் சொல் ஸ்னேஹ **பா**வத்தை குறிக்கும்..'**கருணா**' ஆதரவான சொல்/செயல்களை குறிக்கும்..
'**முதித**' என்பது உடன்பாடு/ஒத்துழைப்பு/உபகாரம் என்ற பொருளில் கொள்ள வேண்டும்..
'**உபேக்ஷா**' என்பது விலகி இருத்தலைக் குறிக்கும்..இந்த நான்கு **பா**வங்களோடு முறைப்படி
சுபமான காரியங்களில் பங்கேற்கும் போது ஸ்னேஹ **பா**வத்துடனும்; அசு**ப** காரியங்களில் பங்கேற்கும் போது ஆதரவாக காருண்ய **பா**வத்துடனும்; புண்ய காரியங்களில் ஈடுபட்டு இருப்பவரிடம் உபகார மனப்பான்மையுடனும்; மற்றும் பாவ காரியங்களில் ஈடுபட்டு இருப்பவரிடம் இருந்து விலகியும் இருந்தால், இப்படி இருப்பவரின் உள்மனதில் [சித்தத்தில்] தெளிவும் சாந்தமும் பெருகும்..[இந்த விதிமுறைகளை நடைமுறை படுத்தினால் ஒருவரின் முன்னேற்றம் பாதிக்கப்படாமல் இடையூறுகள் நீங்கும்]..

34] **प्रच्छर्दनविधारणाभ्यां वा प्राणस्य॥३४॥**

[இடையூறுகள் நீங்குவதற்கான இரண்டாவது வழியாக பிராணாயாமத்தின் ஒரு பகுதி இங்கே கொடுக்கப்படுகிறது].."ப்ரச்சர்தன விதாரணம்" என்ற சொற்கள் வெளியே விடும் மூச்சு மற்றும் உள்ளே இருக்கும் மூச்சு இவைகளை கட்டுப்படுத்தி நம் ப்ராணனின் ஓட்டத்தை சீராக்குவதை குறிக்கிறது..இது அனைவருக்கும் பொருந்தாது..ப்ராணாயாம பயிற்சியில் தேர்ந்தவர்களால் மட்டுமே செய்ய முடியும்..அரைகுறை பயிற்சியுடன் உள்ள மற்றவர்கள் இதை முயற்சிக்க வேண்டாம்..விபரீதங்கள் ஏற்படும்]..

35] **विषयवती वा प्रवृत्तिरुत्पन्ना मनसः स्थितिनिबन्धिनी॥३५॥**

மனது உன்னதமான/உயர்ந்த/புண்ணிய விஷயங்களில் **ப்ரவர்த்திக்கும்** போது [ஈடுபாட்டுடன் நினைத்துக் கொண்டு இருக்கும் போது] மனதை அதிலேயே நிறுத்தி வைக்க முயலவும்..[பேச்சாலோ செயலாலோ அதை மாற்ற முயற்சிப்பதை தவிர்க்கவும்]

36] **विशोका वा ज्योतिष्मती॥३६॥....37] "வீதராக விஷயம் வா சித்தம்"**

சோகங்களே அற்ற அந்த ஜோதி ஸ்வரூபனை மனதில் நிறுத்திக் கொள்..
37] விருப்பு வெறுப்பு களற்ற/பற்றற்ற வர்கள் **"வீத ராகிகள்"** என்று அழைக்கப்படுகின்றனர்.. அவர்களை மனதில் நிறுத்தி அவர்களின் மகத்தான குணங்களையும்/செயல்பாடுகளையும் நினைவுக்கு கொண்டு வந்து அஞ்சலி செலுத்துவதும் நம் வழியில் ஏற்படும் தடங்கல்கள் நீங்க உதவும்

38] **स्वप्ननिद्राज्ञानालम्बनं वा॥३८॥**

ஸ்வப்னத்தை [கனவு நிலையை] நன்கு ஆராய்ந்து கிடைத்த அறிவை [ஞானத்தை] சார்ந்து ஏற்பட்ட தெளிவின் காரணமாகவும் , சித்தவிருத்தி நடக்காத தூக்க நிலை எப்படி

நமக்கு ஒரு சுகமான உணர்வை கொடுக்கிறது என்பதை ஆராய்வதின் மூலமாகவும் தடங்கல்கள் நீங்கும்..[தூக்கத்தின் போது இருக்கும் மனதின் எண்ண ஓட்டங்கள் அற்ற நிலையே இதற்கு காரணம் என்பதை உணரும்போது]

39] **यथाभिमतध्यानाद्व॥३९॥**

உங்களுக்கு மிகவும் அபிமான விஷயங்களை த்யானிப்பதன் மூலமாகவும் //அல்லது உங்களின் அபிமான இஷ்ட தெய்வங்களை த்யானிப்பதன் மூலமாகவும்// உங்கள் சங்கடங்களும் /தடங்கல்களும் நீங்கும்.

.மேலே கூறப்பட்ட ஏழு வழிகளில்.. [33 வது சூத்திரத்திலிருந்து 39 வரை..] ஏதாவது ஒன்றை கடைப்பிடித்தாலும் உங்களை சங்கடப்படுத்தி திசைதிருப்பும் தடங்கல் களிலிருந்து விடுபடலாம்..அதோடு ஓங்கார ஜபத்தின் பலனும் இதுவே ..

40] **परमाणु परममहत्त्वान्तोऽस्य वशीकारः॥४०॥**

இவ்வித தடங்கல்கள் அற்ற, தீவிர வைராக்கியத்துடன் கூடிய அப்பியாசங்களில் [பயிற்சிகளில்] ஈடுபட்டு இருப்பவருக்கு சிறிய அணுவிலிருந்து மிகப்பெரிய மஹத் [அண்டம்] வரை உள்ள அனைத்தும் அவர் வசமாகும்..அனைத்தையும் அவர் வசீகரிக்கிறார்..

41] **क्षीणवृत्तेरभिजातस्येव मणेर्ग्रहीतृग्रहणग्राह्येषु तत्स्थतदञ्जनता समापत्तिः॥४१॥**

இது காணப்படும் [புலன்களால் உணரப்படும்] பொருளோ / விஷயங்களோ தங்களுடைய உண்மையான அர்த்தம் மாறாமல் அப்படியே யாரால் உணரப்படுகிறது என்பதை குறிக்கும் சூத்திரம்...

சித்தவருத்திகள் [எண்ண ஓட்டங்கள்] முழுதும் அடங்கிய மனதை ஒரு களங்கமில்லாத ஸ்படிகத்துடன் ஒப்பிடுகிறார் ["**க்ஷீண வ்ருத்தே அபிஜாதஸ்ய ஏவ மனே**" என்று].. அப்படிப்பட்ட மனது, பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படும் பொருள் இவை மூன்றையும் நன்கு பிரித்து அறியும் தன்மை உடையது..

இந்த மூன்று வித்தியாசமான விஷயங்களையும் அதனதன் தன்மையையும் / பேதத்தையும் தன் நித்ய,அநித்ய வஸ்து விவேகத்தால் நன்கு அறிந்த காரணத்தால் அவர் பார்க்கப்படும் பொருளின் மேல் தன்னை ஐக்கியப்படுத்தி கொள்ளாமல் விவேகத்துடன் விலகி, தன் மனதின் சமநிலை கெடாமல் இருப்பார்..இப்படிப்பட்ட களங்கமற்ற ஸ்படிகம் போன்ற தெளிவான மனதிற்கு, பார்க்கப்படும் வஸ்து தன்னை முழுமையாக பேதமில்லாமல் வெளிப்படுத்தி கொள்ளும்..தவறான விபர்யய ஞானம் ஒருபோதும் ஏற்படாது..[விபர்யயம் என்ற பதம் 8 ம் சூத்திரத்தில் விளக்கப்பட்டு இருக்கிறது].. இது ஒரு சமாதி நிலையை குறிக்கும்…

மற்றவர்களோ சித்தவ்ரித்திகள் குறையாத காரணத்தினால் பார்க்கப்படும் விஷயங்கள்/பொருட்களால் ஈர்க்கப்பட்டு அதனுடனேயே ஐக்கியமாகி மன சஞ்சலத்திற்கு உள்ளாகின்றனர்…

அடுத்த இரண்டு சூத்திரங்களில் [42 / 43]விருத்தி க்ஷீணம் அடைவதற்கு முன் ஏற்படும் இருவகையான சமாதி நிலைகளை பற்றி குறிப்பிடுகிறார் பதஞ்சலி மகரிஷி ..அவைகளை பார்ப்போம்:

42] **तत्र शब्दार्थज्ञानविकल्पैः संकीर्णा सवितर्का समापत्तिः॥४२॥**

இங்கு முதலில் ஏற்படுவது "**சவிதர்க்க சமாபத்தி** "..இதில் பார்க்கப்படும் பொருளின்/விஷயத்தின் சப்த ஞானம் [தவறான புரிதலால் ஏற்படுவது] மற்றும் அர்த்த ஞானம் [சரியாக புரிந்து கொண்டதால் ஏற்படுவது] என்று இரு வகையான அறிவு மாறி மாறி வருவதால் ஒருவித குழப்பத்துடன் கூடிய நிலை உருவாகும்..இந்த நிலையை "**சவிதர்க்க ஸமாபத்தி**" என்று குறிப்பிடுகிறார்..

இந்த விஷயத்திலிருந்து மாறுபட்ட வேறு எந்த விஷயமும் உன் மனதில் இல்லாததாலும் குழப்ப நிலை ஒரே விஷயத்தில் இருப்பதாலும், அதை விதர்க்கத்துடன் கூடிய சமாதி போல் தோன்றும் நிலை என்று குறிப்பிடுகிறார்…

43] **स्मृतिपरिशुद्धौ स्वरूपशून्येवार्थमात्रनिर्भासा निर्वितर्का॥४३॥**

"**ஸ்மிருதி பரிஷுத்தோ**" என்ற பதம் குழப்ப நிலை நீங்கி சித்தத்தில் தெளிவு ஏற்படுவதை குறிப்பது...

தெளிவு பெற்ற மனதில் பார்க்கப்படும் பொருளோ/சூழ்நிலைகளோ மறைந்து அவைகள் உணர்த்தும் அர்த்தம் மட்டும் பளிச்சிடும்..இப்போது ஏற்படுவது
"**நிர்விதர்க்க** " நிலை..

இதை ஒரு சிறிய உதாரணத்தால் விளக்குவோம்...ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்திக்கொண்டு இருக்கும் போது ஒரு மாணவன் தூங்கி வழிகிறான் என்று எடுத்துக்கொள்வோம்..ஆசிரியர் மெதுவாக அவனருகில் சென்று அவனை எழுப்பி "நாளை முதல் நீ வரும்போது ஒரு தலையனையுடன் வா" என்று சொன்னால் அந்த மாணவனின் நிலை எப்படி இருக்கும்? உண்மையான மாணவனுக்கு ஆசிரியர் சொன்னதன் உண்மை பொருள் மட்டும் விளங்கும்..மற்றவர்களின் பரிகாசம் பெரிதாக தெரியாது.

அதன் பிறகு படத்தில் அதிக கவனம் செலுத்துவான்..மற்ற பரிகாசங்களை ஒதுக்கி உண்மை நிலவரத்தை மட்டும் எடுத்துக் கொள்வதால் தர்க்க ரீதியாக மற்ற விஷயங்களை ஒதுக்கி விட்டு ஏற்படும் தெளிவான சிந்தனையே "**நிர் விதர்க்க**" நிலையாக சொல்லப்படுகிறது..

சூழ்நிலையால் பாதிக்கப்பட்டு அதை ஒரு வேதனையாக கருதி மனதில் ஆசிரியரின் மேல் வெறுப்பு உணர்ச்சியை வளர்த்துக்கொள்வது ஏனைய ரக மாணவர்கள்..இவர்களுக்கு மன சமாதானம் அடைந்த சமாதி நிலை ஒருபோதும் ஏற்படாது..

44] **एतयैव सविचारा निर्विचारा च सूक्ष्मविषया व्याख्याता॥४४॥**

இதே வகையில் '**ஸவிசார** ' மற்றும் '**நிர்விசார**' நிலைகளும் மனதளவில் ஏற்படும்...
43 ம் சூத்திரத்தில் சொல்லப்பட்ட விஷயம் வெளியுலகில் நம்முன் ஸ்தூலமாக உண்மையில் நடந்த விஷயம்..அதிலிருந்து ஏற்பட்டவை **சவிதர்க்க / நிர்விதர்க்க** நிலைகள்.
இங்கு சொல்லப்படுவது மனதளவில் நிகழும் போராட்டத்தை குறிப்பது..வெளியில் எவரிடமும் சொல்லாமலே நாமே அதைப் பற்றி தீவிரமாக சிந்தித்து ஒரு தெளிவான முடிவுக்கு வரும்போது, இத்தகைய போராட்டங்கள் ஓய்ந்து ஏற்படும் தெளிவான தீர்மானத்தால் ஏற்படும் ஒருவித மன சமாதான நிலை "**நிர்விசார சமாதி**'...
இந்த இருவகை சமாதி நிலைகளும் [**சவிதர்க்க/நிர்விதர்க்க மற்றும் சவிசார/நிர்விசார**] புற அல்லது அக விஷயங்களை ஒட்டி ஏற்படுவதால் வெவ்வேறு விஷயங்களை ஒட்டி மாறி மாறி தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும்..மனம் சூக்ஷ்ம விஷயங்களில் லயிக்க ஆரம்பிக்கும் வரை இவ்வகை நிலைகள் மாறி மாறி வந்து கொண்டே இருக்கும்..[அதாவது மனம்,   புற மற்றும் அக விஷயங்களில்   இருந்து விலகும் வரை இந்நிலைகள் தொடரும்]].

45] **सूक्ष्मविषयत्वं चालिङ्गपर्यवसानम्॥४५॥**

மனதில் உருவங்களே அற்ற நிலை ஏற்படும் வரை [குறிப்பிட்டு சொல்லும் விதம் ஏதும் மனதில் இல்லாத, வெற்றிடம் போன்று தோற்றமளிக்கும் நிலை வரை] இந்த சூக்ஷ்ம விஷய நிலை தொடரும்..
லிங்கம் என்பது ஒரு குறி [symbol]..அவ்வளவே ..அதன் மூலம் ஏதோ ஒரு சூக்ஷ்ம விஷயம் நமக்கு புலப்படுவது போன்ற தோற்றம்..
ஆனால் அலிங்கம் என்பது அப்படி குறியீட்டு காட்டும் சூக்ஷ்ம விஷயம் ஏதும் இல்லாத வெற்றிடம் போன்ற மன நிலையை குறிப்பது…

46] **ता एव सबीजः समाधिः॥४६॥**

அலிங்க நிலை வரும் வரை தோன்றக்கூடிய அனைத்து விதமான சமாதி நிலைகளும் "**சபீஜ** " சமாதி என்று அழைக்கப்படும்..அதாவது ஏதோ ஒரு தோற்றத்தை ஒட்டி ஏற்படும் சமாதி [அந்த தோற்றத்திற்குரிய காரணமாக [**பீஜ**மாக] ஏதாவது ஒரு விஷயம் இருப்பதால்.

47] **निर्विचार वैशारद्येऽध्यात्म प्रसादः॥४७**

நிர்விசார சமாதி நிலையில் தொடர்ந்து இருக்க முடியுமே ஆனால் அதன் காரணமாக 'தான் யார்' என்ற ஆத்ம ஞானம் ஸ்திரமாக ஏற்படுகிறது...இதனால் தடுமாற்றம் இல்லாத பேரமைதி பிரசாதமாக கிடைக்கிறது..

48] **ऋतम्भरा तत्र प्रज्ञा॥४८॥**

அப்படிப்பட்ட பிரக்ஞையுடன் கூடிய பேரமைதியில் கிடைக்கும் ஞானம், அசைக்க முடியாத பரம சத்தியமானதாக இருக்கும்..மூலப்ப்ரக்ரிதியுடன் ஒன்றி விடுவதால் ஒரு விஷயத்தைப் பற்றி முன்பு அறிந்திராத போதிலும், அது பற்றிய துல்லியமான அறிவு சர்வ சாதாரணமாக ஏற்படுகிறது..

49] **श्रुतानुमानप्रज्ञाभ्यामन्यविषया विशेषार्थत्वात्॥४९॥**

கேட்டு/அனுமானம் செய்து பெற்ற அறிவை காட்டிலும் பிரத்யேகமான, விசேஷமான, துல்லியமான உண்மையான அறிவும் அந்த விஷயங்களைப் பற்றி தெரியவரும்..

50] **तज्जः संस्कारोऽन्यसंस्कार प्रतिबन्धी॥५०॥**

அதனால் ஏற்படும் 'சம்ஸ்காரங்கள் ', மற்றபடி ஏற்கனவே ஏற்பட்ட 'ஸம்ஸ்காரங்களை' அழிக்கும் தன்மை பெற்றது..ஆகவே நம் சித்தத்தின் ஆழமான பகுதியில் புதைந்து கிடைக்கும் பிராரப்த மற்றும் சஞ்சித கர்ம பலன்களும் வலுவிழந்து, நாளடைவில் முழுவதும் அழியும்..பிறப்பு,இறப்பு எனும் சூழலில் இருந்து விடுபட காரணமாக அமையும் ..

51] **तस्यापि निरोधे सर्वनिरोधान्निर्बीजः समाधिः॥५१॥**

தொடர்ந்த பயிற்சிகளால் இந்த ஸம்ஸ்காரங்களும் அழிபடும் போது ஏற்படுவது, சர்வ சித்த விருத்திகளும் அழிந்த " நிர் பீஜ சமாதி" நிலை ..
இதுவே யோகியின் உத்தம நிலை..

இத்துடன் முதல் பாதம் "சமாதி பாதம்" முடிவடைகிறது..ஒரு தத்துவமாக யோகா சாஸ்திரம் முழுவதும் பதஞ்சலி மகரிஷி கொடுத்துவிட்டார்.. .
தொடர்வது இரண்டாம் பாதம் "சாதனா பாதம்".. அதன் பிற்பகுதியில் அஷ்டாங்க யோகத்தின் முதல் ஐந்து அங்கங்களான "பகிரங்க யோகா" விவரமாக சொல்லப்பட இருக்கிறது.இதில் பலராலும் கடைபிடிக்கக் கூடிய வகையில் பலவகை சாதனைகள் [Practices] "யமா", "நியமா", "ஆசனா" ,"பிராணாயாமா" மற்றும் "பிரத்யாகாரா " என்று கொடுக்கப்பட்டு இருக்கும்...
விவரமாக இரண்டாவது பாதம், "சாதனா பாதத்தை" இனி பார்ப்போம்...